# கோபிசெட்டிபாளையம் நகராட்சி
# 30.05.2022 ம் தேதி நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்
# தீர்மான நகல்

1. இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஏப்ரல் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .

**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.95**

2. இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஏப்ரல் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .

**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.96**

3. இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் ஏப்ரல் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .

**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.97**

4. இந்நகராட்சி நகரமைப்பு அலுவலர் அவர்களின் ஏப்ரல் 2022–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது (க.எண்.1464/2016/சி1)

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் பதிவு செய்யலாம் .

**பதிவு செய்யப்பட்டது மன்றத்தீர்மான எண்.98**

5. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள் மற்றும் கடைகள் ஆகியவற்றை குத்தகை மற்றும் வாடகைக்கு விடப்படுவதின் மூலம் பெறப்படும் தொகைகள்ளுக்கு 01.06.2007 முதல் 31.03.2013 வரை உள்ள காலங்களுக்கு சேவை வரி ரூ.46,20,230/– அதற்குண்டான வட்டி மற்றும் அபராதக்கட்டணம் செலுத்தப்படவேண்டும் என இணை ஆணையர், மத்திய கலால் மற்றும் சுங்கத்துறை சேலம் அவர்களின் கடிதம் எண். C.No.V/RIPS/15/119/2008–37 ADJUDICATION நாள். 16.12.2014 ன்படி உத்திரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவினை எதிர்த்து, மத்திய கலால் மற்றும் சேவை வரி மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தில் நகராட்சி சார்பாக மேல் முறையீடு செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது.

மேற்படி மேல்முறையீடு நிலுவையில் இருக்கும் நிலையில், சேவை வரி தொடர்பான SABKA VISHWAS (Legacy Dispute Resolution) SCHEME – 2019 என்ற One time settlement திட்டத்தின்படி (FORM SVLDRS–1) இணைய வழியாக 30.12.2019ந் தேதியில் விண்ணப்பம் செய்யப்பட்டது, மேற்கண்டவாறு விண்ணப்பம் செய்யப்பட்டதில், மேற்படி SABKS VISWAS திட்டத்தின்படி சேவை வரி விலக்கு அளிக்கப்பட்ட தொகை போக மீதம் செலுத்தப்படவேண்டிய தொகை ரூ.10,39,571/– செலுத்தும்படி 23.06.2020 ந் தேதியில் FORM SVLDRS–3 பெறப்பட்டது. மேற்படி Form SVLDRS–3 ன் படி இறுதி செய்யப்பட்ட சேவை வரி தொகை ரூ.10,39,571/– ஐ 01.07.2020 ந் தேதியன்று செலுத்தப்பட்டது. மேற்கண்டவாறு செலுத்தப்பட்ட சேவை வரித்தொகைக்கு இறுதி சான்று Form SVLDRS–4 மத்திய சேவை மற்றும் பொருட்கள் வரி ஆணையத்தால் வழங்கப்படவில்லை.

இந்நிலையில் மத்திய கலால் மற்றும் சேவை வரி மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தில் நகராட்சி சார்பாக மேல் முறையீடு செய்யப்பட்ட மனு கடந்த 21.04.2022 ந் தேதியில் விசாரணைக்கு வரப்பட்டதில், நகராட்சி GST வழக்கறிஞர் திரு.எஸ்.சக்திவேல் அவர்கள் சார்பாக அவரது மூத்த வழக்கறிஞர் திரு.எஸ்.முருகப்பன், சென்னை அவர்கள் ஆஜராகியுள்ளார்கள். மேல்முறையீட்டு மனு விசாரனை தேதி குறிப்பிடப்படாமல் ஜூலை 2022 மாதத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

நகராட்சி GST வழக்கறிஞர் திரு.எஸ்.சக்திவேல் அவர்கள் தனது 30.04.2022 ந் தேதிய கடிதத்தில், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு (WRIT PETITION) தாக்கல் செய்து, மேற்படி இறுதி சான்று Form SVLDRS–4 வழங்க, மத்திய சேவை மற்றும் பொருட்கள் வரி ஆணையத்திற்கு கட்டளை பிறப்பிக்கக்கோரி, வழக்கு தொடரலாம் எனத் தெரிவித்துள்ளார்.

எனவே நகராட்சி GST வழக்கறிஞர் திரு.எஸ்.சக்திவேல் அவர்கள் குறிப்பின்படி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து நடத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ. 1,00,000/– ஐ (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப்பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 9108/2008/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.99**

6. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தின் " பி " பிரிவு அங்கீகாரம் 20.04.2022 ந் தேதியுடன் முடிவடைந்தது. எனவே மேற்படி " பி " பிரிவு அங்கீகாரத்தினை 21.04.2022 ந் தேதி முதல் 20.04.2023 ந் தேதி வரை புதுப்பிப்பதற்காக பேருந்து நிலையத்தில் பேருந்துகள் வந்து செல்லும் கால அட்டவணை அமைக்ககோரியதின்படி, மேற்படி கால அட்டவணையை பேருந்து நிலையத்தில் பொருத்துவதற்கு ஆகும் தொகை ரூ.8,300/– ஐ அவசர அவசியம் கருதி வருவாய் ஆய்வர் அவர்களால் வழங்கப்பட்டது. எனவே மேற்படி தொகையினை வருவாய் ஆய்வர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றப் பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண். 2978/2020/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.100**

7. நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட 30 கடைகளுக்கு 05.05.2022ந் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

1. புதியாஸ்பத்திரி வீதி கடை எண். 7 மற்றும் 8.
2. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 33, 34, 42, 43, 53, 55, 57, 58, 59, 60, 61, 66, 67, 69, 70, 71, 72, 73, 74
3. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 56, 45
4. பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 20.
5. வாரச்சந்தை கடை எண்.2 மற்றும் 31
6. பழைய ஆஸ்பத்திரி வீதி கடை எண். 16, 12
7. பழைய ஆஸ்பத்திரி வீதி கோழி கடை எண். 2
8. பழைய பேருந்து நிலையம் MUDP கடை எண். 4

மேற்கண்ட கடைகளுக்கு நடைபெற்ற பொது ஏலத்தில் ஒருவரும் கலந்துகொள்ளவில்லை. கீழ்க்கண்டவாறு ஒரே ஒரு கடைக்கு மட்டும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | குத்தகை இனங்கள் | ஒப்பந்தப்புள்ளி அளித்தவர்கள் பெயர் | ஏற்கெனவே உள்ள மாத வாடகை ரூ. | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்ட மாத வாடகை ரூ. | ஏலக் கேள்வி |
|---|---|---|---|---|---|
| [1] | [2] | [3] | [4] | [5] | [6] |
| 1 | பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 20 | திரு.பி.குணசேகரன் த/பெ. பழனிசாமி, 1/60, முத்து நகர், கோபிசெட்டிபாளையம் 98653 | ரூ.4,550/- | ரூ.1,600/- | இல்லை |
| | | திரு.ஆர்.நாகேந்திரன் த/பெ. ராஜு 24ஏ. திருவள்ளுவர் வீதி, ஆப்பக்கூடல், சக்திநகர்(அஞ்சல்) பவானி, 88833 67666 | ரூ.4,550/- | **ரூ.1,800/-** | |

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில்

1. வரிசை எண். 1 பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 20 -க்கு திரு.பி.குணசேகரன் என்பவர் ஏற்கெனவே உள்ள மாதவாடகை ரூ.4,550/- ஐ விட ரூ,2,950/- குறைவாக ரூ.1,600/-க்கும், திரு.பி.நாகேந்திரன் என்பவர் ஏற்கெனவே உள்ள மாதவாடகை ரூ.4,550/- ஐ விட 2,750/- குறைவாக ரூ. 1,800/-க்கும் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளனர்.

வருவாய் ஆய்வர் அவர்கள் 12.05.2022 ந் தேதியில் பின்வருமாறு குறிப்பு வழங்கியுள்ளார்.

மேற்படி பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 20 க்கு கடந்த 08.09.2021 ந் தேதியில் நடைபெற்ற பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் மாதவாடகை ரூ.1,500/- என நிர்ணயம் செய்யப்பட்ட நிலையில் திரு.எஸ்.வினோத்குமார் என்பவரால் மாத வாடகை ரூ.4,550/- க்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, மாதவாடகை ரூ.4,550/- க்கு 27.09.2021 ந் தேதியில் குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. அதனையடுத்து மேற்படி திரு.எஸ்.வினோத்குமார் தனது 08.10.2021ந் தேதிய விண்ணப்பத்தில் மேற்படி கடைக்கு மாதவாடகை ரூ.4,550/- என தவறுதலாக கூறப்பட்டது எனவும், தற்சமயம் தன்னால் இவ்வளவு தொகையை வாடகையாக செலுத்த இயலாத காரணத்தினால் தனது ஒப்பந்தப்புள்ளியை ரத்து செய்து தருமாறு கோரியுள்ளார். மேற்கண்ட காரணத்தினால் திரு.எஸ்.வினோத்குமார் என்பவருக்கு வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தினை ரத்து செய்து அக்கடையினை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் வைக்கப்பட்டது. நாளது தேதி வரை 8 முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 8-வது ஒப்பந்தப்புள்ளியில் திரு.ஆர்.நாகேந்திரன் என்பவர் மேற்படி கடைக்கு மாத வாடகை ரூ.1,800/- க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார்.

பழைய பேருந்து நிலைய MUDF கடை எண். 20 க்கு ஏழு முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டும் எவரும் அக்கடையினை எடுக்காததால் நகராட்சிக்கு பெரும் நிதி இழப்பீடு ஏற்படுகிறது. எனவே 8-வது முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் திரு.ஆர்.நாகேந்திரன் என்பவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு மன்றப்பொருள் வைக்கப்படுகிறது.

ஏலம் போகாத மற்ற கடைகளுக்கு மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.
(ந.க.எண். 301/2021/அ3)

**அலுவலக குறிப்பு :** மன்றம் முடிவு செய்யலாம்.

**அனைத்து கடைகளுக்கும் மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர அனுமதி அளிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.101**

8. இந்நகராட்சி பகுதியில் கரட்டூரில் அமைந்துள்ள RRC யின் முன்புறத்தில் கொட்டப்பட்டுள்ள கழிவுகளை அப்புறப்படுத்தி அங்குள்ள உயிரி எரிவாயு கூடத்தினை சுற்றியும் உள்ள செடி, கொடிகள், முட்புதர்கள் போன்றவற்றினை JCB வாகனம் கொண்டு சுத்தம் செய்து பணிமேற்கொள்ளவும், மேலும், ராமர் எக்ஸ்டென்சன் பகுதியில் அமைந்துள்ள மயானம் மற்றும் நுண் உரமாக்குதல் மையம் பகுதியை ஒட்டி உள்ள பகுதியில் செடிகள் மற்றும் முட்புதர்களை அகற்றி உலர் கழிவுகள் மயானம் பகுதிக்கு செல்லாதவாறு 6 அடி உயரம் 135 மீ நீளம் கொண்ட பச்சைவலை மற்றும் 15 எண்ணிக்கை மூங்கில் குச்சிகளை கொள்முதல் செய்து தடுப்பு அமைத்து பணியினை மேற்கொள்ளவும், அதற்காகும் செலவினம் ரூ. 22,000/− ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1086/2022/எச் 1)

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.செலவினத்தினை பொது நிதியிலிருந்து மேற்கொள்வும், மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலககுறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.102**

9. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 3,4,5,7,9,10,11,12,13,15,23 ஆகிய வார்டுகள் மற்றும் தினசரி சந்தை ஆகிய பகுதிகளில் M/s. S.S. Engineerrs, 3/6, Kamathenu Nagar, Vadavalli, Coimbatore – 41 என்னும் நிறுவனத்தினரிடமிருந்து தினமும் 92 தூய்மைப் பணியாளர்களை பெற்று வெளிக்கொணர்வு முறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 31.05.2022 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21787/2021/EA 2 நாள். 02.10.2021 இன் படி இந்நகராட்சிக்கு அளவுகோல்களின் படி தேவையான துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முறையில் எடுத்து பணி மேற்கொள்ள அனுமதி வழங்க இவ்வலுவலக கடித ந.க.எண். 2604/2021/எச் 1 நாள். 26.11.2021 இன் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

இந்நிலையில் M/s. S.S. Engineerrs, 3/6, Kamathenu Nagar, Vadavalli, Coimbatore – 41 அவர்களின் 12.05.2022 ஆம் தேதியிட்ட கடிதத்தில் 31.05.2022 ஆம் தேதியுடன் முடிவடையும் மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கான ஒப்பந்த காலத்தினை தற்போது வழங்கி வரும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான ரூ.649/− என்னும் விலைவிகிதத்திலேயே மூன்று மாத காலத்திற்கு பணியாளர்களுக்கு வழங்க சம்மதம் தெரிவித்து கால நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட 11 வார்டுகளிலும், துப்புரவு பணிகள் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், நகரின் பொது சுகாதார பணியின் அவசியம் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.06.2022 முதல் 31.08.2022 ஆம் தேதி வரை மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிடம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 649/− என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தினமும் 92 தூய்மைப் பணியாளர்களை தொடர்ந்து பெற்று பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும், செலவினம் ரூ.54.93 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2914/2020/எச்1)

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.இதற்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

**அலுவலககுறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.103**

10. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 24,25,28,29 மற்றும் 30 ஆகிய வார்டுகளில் M/s. Southern Solid Waste Mangaement Service, Pottavilai, Koottamavu, Mulagumoodu, Kanniyakumari – 629 167 என்னும் நிறுவனத்தினரிடமிருந்து தினமும் 30 தூய்மைப் பணியாளர்களை பெற்று வெளிக்கொணர்வு முறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 31.05.2022 ஆம் தேதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 21787/2021/EA 2 நாள். 02.10.2021 இன் படி இந்நகராட்சிக்கு அளவுகோல்களின் படி தேவையான

துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் வெளிக்கொணர்வு முறையில் எடுத்து பணி மேற்கொள்ள அனுமதி வழங்க இவ்வலுவலக கடித ந.க.எண். 2604/2021/எச் 1 நாள். 26.11.2021 இன் மூலம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு கருத்துரு பரிசீலனையில் உள்ளது.

மேலும், M/s. Southern Solid Waste Mangaement Service, Pottavilai, Koottamavu, Mulagumoodu, Kanniyakumari – 629 167 அவர்களின் 12.05.2022 ஆம் தேதியிட்ட கடிதத்தில் 31.05.2022 ஆம் தேதியுடன் முடிவடையும் மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கான ஒப்பந்த காலத்தினை தற்போது வழங்கி வரும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான ரூ.690/– என்னும் விலைவிகிதத்திலேயே மூன்று மாதகாலத்திற்கு பணியாளர்களை வழங்க சம்மதம் தெரிவித்து கால நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட 5 வார்டுகளிலும், துப்புரவு பணிகள் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், நகரின் பொது சுகாதார பணியின் அவசியம் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.06.2022 முதல் 31.08.2022 ஆம் தேதி வரை மூன்று மாத காலத்திற்கு நீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிடம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 690/– என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தினமும் 30 தூய்மைப் பணியாளர்களை பெற்று தொடர்ந்து பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும், செலவினம் ரூ.19.04 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2415/2020/எச்1)

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.இதற்கான செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலககுறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.104**

11. கோபிசெட்டிபாளையம் நகராட்சி பகுதியில் உள்ள 9 நகராட்சி பள்ளிகளில் பள்ளிக் கழிவறைகள் மற்றும் பள்ளி வளாக தூய்மைப் பணிகள் M/s. Southern Solid Waste Mangaement Service, Pottavilai, Koottamavu, Mulagumoodu, Kanniyakumari – 629 167 என்னும் நிறுவனத்தினரிடமிருந்து தினமும் 19 தூய்மைப் பணியாளர்களை பெற்று வெளிக்கொணர்வு முறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 31.05.2022 ஆம் தேதியுடன் முடிவடைகிறது

இந்நிலையில் M/s. Southern Solid Waste Mangaement Service, Pottavilai, Koottamavu, Mulagumoodu, Kanniyakumari – 629 167 அவர்களின் 12.05.2022 ஆம் நாளிட்ட கடித்தில் 31.05.2022 ஆம் தேதியுடன் முடிவடையும் 9 நகராட்சி பள்ளிகளில் பள்ளிக் கழிவறைகள் மற்றும் பள்ளி வளாக தூய்மைப் பணிக்கான ஒப்பந்த காலத்தினை தற்போது வழங்கி வரும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான ரூ. 690/– என்னும் விலைவிகிதத்திலேயே மூன்று மாதகாலத்திற்கு பணியாளர்களை வழங்க சம்மதம் தெரிவித்து கால நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளார்.

இந்நிலையில் மேற்குறிப்பிட்ட 9 நகராட்சி பள்ளிகளின் தூய்மைப் பணிகளில் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், பள்ளி மாணவர்களின் பொது சுகாதார நலன் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.06.2022 முதல் 31.08.2022 ஆம் தேதி வரை மூன்று மாத காலத்திற்கு கால நீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ. 690/– என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தினமும் 19 தூய்மைப் பணியாளர்களை தொடர்ந்து பெற்று பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும், செலவினம் ரூ.12.06 இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.க.எண். 2417/2020/எச் 1)

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.இதற்கான செலவினத்தினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலககுறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.105**

12. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் உள்ள 30 வார்டு பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல் மற்றும் புகை மருந்து தெளித்தல் போன்ற பணிகளுக்கு தினமும் 57 பணியாளர்களை (DBC Workers) வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் M/s S.S. Engineerrs,3/6, Kamadenu Nagar,Vadavalli, Coimbatore – 641041 அவர்களிடம் பெற்று நோய் தடுப்பு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் M/s. S.S. Engineerrs, 3/6, Kamathenu Nagar, Vadavalli, Coimbatore – 41 அவர்களின் 12.05.2022 ஆம் தேதியிட்ட கடிதத்தில் 31.05.2022 ஆம் தேதியுடன் முடிவடையும் மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கான ஒப்பந்த காலத்தினை தற்போது வழங்கி வரும் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கான ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான ரூ.545.50/– என்னும் விலைவிகிதத்திலேயே மூன்று மாத காலத்திற்கு பணியாளர்களை வழங்க சம்மதம் தெரிவித்து கால நீட்டிப்பு செய்து தருமாறு கோரியுள்ளார்.

மேற்குறிப்பிட்ட கொசு புழு ஒழிப்பு பணிகள் எந்தவிதமான தொய்வுமின்றி தொடர்ந்து நடைபெற வேண்டியது அவசியம் என்பதாலும், பொது சுகாதார பணியின் அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதியும், இப்பணியின் ஒப்பந்தக்காலத்தினை 01.06.2022 முதல் 31.08.2022 ஆம் தேதி வரை மூன்று மாத காலத்திற்கு காலநீட்டிப்பு செய்து கொள்ளவும், மேற்படி நிறுவனத்தினரிடம் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.545.50/– என்னும் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் தினமும் 57 DBC பணியாளர்களை பெற்று தொடர்ந்து பணி மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ. 28.60/– இலட்சத்திற்கு மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. (ந.எண். 1231/2020/எச்1)

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலககுறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.106**

13. இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் துப்புரவு பணி மேற்க்கொண்ட மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு தொழிலாளர் சேமநலநிதித் தொகை பிடித்தம் செய்து EPFO நிறுவனத்திற்கு செலுத்துவது தொடர்பாக தொழிலாளர் சேமநலநிதி துணை ஆணையர், சேலம் அவர்களின் நடவடிக்கையினை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் இந்நகராட்சியின் மூலம் Wp.No. 34555–2012 இல் எதிர் வழக்கு தொடரப்பட்டு, வழக்கு தற்போது நடைபெற்று வருகிறது.

மேற்படி வழக்கு சம்மந்தமாக இந்நகராட்சி சார்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்காட வழக்குக் கட்டணம் ரூ.25,000/– ஐ திரு.ஜி.சங்கரன்,பி.ஏ.பி,எல் வழக்கறிஞர்க்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3221/2021/எச்1)

**அலுவலகக் குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.107**

14. இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவு வாகனம் எண். TN 36 J 2724 டிப்பர் வாகனத்தின் தகுதி சான்று வரும் 15.06.2022 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. மேற்படி வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை செப்பணிட்டு தகுதி சான்று புதுப்பிக்க ஏதுவாக பழுதுகளை செப்பணிட்டு கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ. 1,40,448/– ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
( ந.க.எண்.1174/2022/எச் 1)

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலககுறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.108**

15. கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் பராமரிப்பில் உள்ள 9 பள்ளிகளில் மாணவியர்கள் படிக்கும் 5 பள்ளிகளில் மட்டும் தினமும் சேகரமாகும் பயன்படுத்திய நாப்கின்களை சுகாதார முறைப்படி அப்புறப்படுத்த உரிய வசதிகளை ஏற்படுத்தி தருமாறு சம்மந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர்கள் கடித

வாயிலாக தெரிவித்துள்ளதற்கிணங்க இந்நகராட்சியின் பின்வரும் பள்ளிகளுக்கு எரியூட்டும் இயந்திரம் வாங்கி வழங்கிட வேண்டியுள்ளது.

| வ. எண் | பள்ளியின் பெயர் | தேவைப்படும் எரியூட்டும் இயந்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | நகரவை மகளிர் மேல்நிலைப்பள்ளி, முருகன்புதூர் | 2 |
| 2. | நகராட்சி நடுநிலைப் பள்ளி (டவுன்) | 1 |
| 3. | ஜெயராம் நடுநிலைப் பள்ளி | 1 |
| 4. | நகரவை மேல்நிலைப்பள்ளி, மொடச்சூர் | 1 |
| 5. | வேங்கம்மையர் நகராட்சி உயர்நிலைப் பள்ளி | 1 |

மேற்குறிப்பிட்ட பள்ளிகளுக்கு 6 நாப்கின் டெஸ்ட்ராயர் மெஷின்கள் (Sanitary Napkin Destroyer Machine – Quick Destroy RTEZ5E) ரூ.3,00,900/– மதிப்பீட்டில் புதியதாக கொள்முதல் செய்து பள்ளிகளில் பொருத்தி சுகாதார பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
(ந.க.எண்.0668/2022/எச்1)

**அலுவலகக்குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலககுறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.109**

16. கோபிசெட்டிபாளையம் நகராட்சியின் உயிரி எரிவாயு கூடத்தின் (Bio Methanation Plant) ஜெனரேட்டரை இயக்குவதற்கான பேட்டரி 100 AH பேட்டரி மூன்று வருடங்களாக பயன்பாட்டில் இருந்து வருகிறது தற்போது அப்பேட்டரியின் திறன் குறைந்து பழுதடைந்து இயக்கமுடியாத நிலையில் உள்ளது. எனவே ஜெனரேட்டரை தொடர்ந்து இயக்குவதற்கு ஏதுவாக புதிய 100 AH பேட்டரி வாங்கி பொருத்திக்கொள்ள உள்ளூர் பேட்டரி விற்பனை செய்யும் நிறுவனங்களில் 23.05.2022 ஆம் தேதி அன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம் பின்வருமாறு

| வ.எண் | நிறுவனங்களின் விபரம் | விலைப்புள்ளி தொகை (ரூ) 100 AH திறன் கொண்ட Trucker 100 R பேட்டரி ஒன்றிற்கு (பழைய பேட்டரியை எடுத்துக்கொண்டு) |
|---|---|---|
| 1 | ஸ்ரீ ராகவேந்திரா ஆட்டோ மொபைல்ஸ், 3ஏ, பஜனைக்கோவில் வீதி, ஈரோடு மெயின் ரோடு, கோபிசெட்டிபாளையம் 638 476 | 7800/– |
| 2 | ஸ்ரீ ராகவேந்திரா எலக்ட்ரோ எக்யூப்மெண்ட்ஸ் பிரைவேட் லிமிடெட், 4/397, முத்துகாளிமடை, பி.வெள்ளாளபாளையம், கோபிசெட்டிபாளையம் 638 476 | 8200/– |
| 3 | ஸ்ரீ பேட்டரீஸ், 387, குள்ளம்பாளையம் பிரிவு, ஈரோடு மெயின் ரோடு, கோபிசெட்டிபாளையம் 638 476 | 8400/– |

மேற்குறிப்பிட்ட விவரப்படி விலைவிகிதம வழங்கிய நிறுவனங்களில் வரிசை எண்.1 இல் குறிப்பிட்டுள்ள ஸ்ரீ ராகவேந்திரா ஆட்டோ மொபைல்ஸ்,3ஏ, பஜனைக்கோவில் வீதி, ஈரோடு மெயின் ரோடு, கோபிசெட்டிபாளையம் அவர்களின் விலைவிகிதம் மற்ற இரண்டையும் விட குறைவாக உள்ளதால் அந்நிறுவனத்தின் விலைவிகிதமான ரூ.7800/- விலையில் கொள்முதல் செய்து பொருத்திக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.0866/2022/எச்1)

அலுவலகக்குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இதற்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலககுறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.110**

17. இந்நகராட்சியின் உயிரி எரிவாயு கூடத்தில் உள்ள உணவு மற்றும் பழக்கழிவுகளை அரைக்கும் இயந்திரத்தினை இயக்கும் மின் மோட்டாரில் உள்ள மெயின் சாப்ட் பழுதாகி விட்டதால் மோட்டாரை தொடர்ந்து இயக்கி பணி மேற்கொள்ள வேண்டி உள்ளதன் பொருட்டு புதியதாக சாப்ட், பேரிங்குகள் மற்றும் ஆயில் சீல் போன்றவைகள் புதியதாக பொருத்தி பழுது சரிசெய்யப்பட வேண்டியுள்ளது. இப்பணியினை மேற்கொள்ளும் உள்ளூர் நிறுவனங்களில் விலைப்புள்ளிகள் 20.05.2022 அன்று பெறப்பட்டது. அதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி விலைவிகிதம் (ரூ.) |
|---|---|---|
| 1. | ஸ்ரீ தேவி எலக்ட்ரிக்கல்ஸ்,<br>பச்சைமலைரோடு, சீதாலட்சுமிபுரம்,<br>கோபிசெட்டிபாளையம் | ரூ. 4,925/- |
| 2. | ஸ்ரீ வாரி எலக்ட்ரிக்கல்ஸ்,<br>கரட்டூர் ரோடு, பச்சைமலை,<br>பாரதி வித்தியாலாயா பள்ளி அருகில்,<br>கோபிசெட்டிபாளையம் | ரூ. 4,850/- |
| 3. | அபிராமி எலக்ட்ரிக்கல்ஸ்,<br>14/231, சத்தி மெயின் ரோடு,<br>பால் சொசைட்டி எதிரில்,<br>கரட்டடிபாளையம்,<br>கோபிசெட்டிபாளையம் | ரூ. 4,975/- |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஸ்ரீ வாரி எலக்ட்ரிக்கல்ஸ், கரட்டூர், பச்சைமலை, பாரதி வித்தியாலாயா பள்ளி அருகில், கோபிசெட்டிபாளையம் என்ற நிறுவனத்தின் விலைவிகிதம் மற்ற இரண்டையும் விட குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அந்நிறுவனத்திரிடம் இப்பணியினை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 0866/2022/எச் 1)

**அலுவலகக் குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.இதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலககுறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.111**

18. இந்நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு உபயோகப்படுத்தப்படும் BOV வாகனங்களில் 14 வாகனங்களின் பேட்டரிகளின் திறன் குறைந்து பேட்டரிகள் பழுதாகி பழுதுகளை சரி செய்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. மேற்படி வாகனங்கள் வாங்கப்பட்டு மூன்று ஆண்டுகள் முடிவுற்றதால் புதியதாக லித்தியம் பேட்டரிகள் டயர், டியூப், கன்ட்ரோலர், மோட்டர், சார்ஜர், மீட்டர் வாங்கி பொருத்திக் கொள்ளவும் அவ்வாகனங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்து தேவைப்படும் புதிய பாகங்களை பொருத்தி வாகனங்களை தொடர்ந்து இயக்கி கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது. இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.11.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1176/2022/எச்1)

**அலுவலகக்குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2.இதற்காகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம் அல்லது
3. 15 வது நிதிக்குழு 2022 – 2023 ஆம் ஆண்டில் செலவு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**அலுவலககுறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.112**

19. கோபிசெட்டிபாளையம் நகராட்சியில் 2020–2021 ஆம் ஆண்டிற்கான வருவாய் நிதி, குடிநீர் மற்றும் மூலதன நிதி மற்றும் கல்வி நிதி அறிக்கைகள் தட்டச்சு செய்து பிரிண்ட் அவுட் எடுக்கும் பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.61 நாள்.29.04.2022 ல் அனுமதி அளித்துள்ளது. அதன்படி உள்ளூர் விலைப்புள்ளி 05.05.2022 அன்று கோரியதில் கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | விலைப்புள்ளி அளித்தவர் விபரம் | தொகை |
|---|---|---|
| 1. | எல்.கே.டிசைனர்ஸ்<br>சௌந்திரபாண்டியன் வீதி, கோபி | ரூ.9950/– |
| 2. | ஜெய் கம்பியூட்டர்ஸ்<br>கச்சேரி வீதி, கோபி | ரூ.9900/– |
| 3. | ஸ்டார் பிரிண்ட் & ஸ்டேசனரி, எஸ்.டி.என்.<br>காலணி கோபி | ரூ.9800/– |

மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளை இறுதி செய்திட மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்த ஸ்டார் பிரிண்ட் & ஸ்டேசனரி, எஸ்.டி.என். காலணி கோபி அவர்களின் குறைந்த விலை விகிதம் ரூ.9800/– அளித்துள்ள விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ஸ்டார் பிரிண்ட் & ஸ்டேசனரி – ன் குறைந்த விலைப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.**
**மன்றத்தீர்மான எண்.113**

20. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 இல் ஏற்கனவே உள்ள சிறுமின்விசை பம்ப் தண்ணீர் குழாயில் இருந்து கீழ்கண்டுள்ள பகுதிகளுக்கு தண்ணீர் பற்றாக்குறை காரணமாக குழாய் நீட்டிப்பு செய்யப்பட வேண்டியுள்ளது.

1. ஸ்ரீ கணபதி நகர்
2. நாகமலை எக்ஸ்டன்சன் குறுக்கு தெரு –2
3. ஸ்ரீ ராமபுரம்
4. கிருஷ்ணா நகர்
5. கிருஷ்ணா நகர் எக்ஸ்டன்சன்

மேற்படி பகுதிகளுக்கு குழாய் நீட்டிப்பு செய்திட மதிப்பீட்டு செலவினம் ரூ.2.45 இலட்சம் ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி குடிநிர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .
**அனுமதி அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.114**

21. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.9 இல் உள்ள சிறுமின்விசை பம்ப் சின்டெக்ஸ் டேங்கிலிருந்து கீழ்காணும் இடங்களில் குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்து தர வேண்டியுள்ளது.

1. மாருதி நகர் சின்டெக்ஸ் டேங்கிலிருந்து கிழக்கு மற்றும் வடக்கு நோக்கி மற்றும்
2. பதிவிலாஸ் வீதிக்கு

மேற்படி பணியினை மேற்கொள்ளதற்கு மதிப்பீடு செலவினம் ரூ.1.10 இலட்சம் ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி குடிநீர்நிதியில் இருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
**அனுமதி அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.115**

22. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13 வாய்க்கால் வீதி அரச மர விநாயகர் கோவில் அருகில் உள்ள ஆழ்துளை கிணறு கைபம்பினை அகற்றிவிட்டு சிறுமின்விசை பம்ப் பொருத்தி தண்ணீர் வசதி செய்து தர மதிப்பீடு செலவினம் ரூ.2,00,000/– ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
**அனுமதி அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.116**

23. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.26 சீதாலட்சுமிபுரத்தில் 2–வது வீதியில் உள்ள ஆழ்துளை கிணற்றில் பொருத்தப்பட்டுள்ள கைபம்பினை அகற்றிவிட்டு சிறுமின்விசை பம்ப் பொருத்தி Sintex – டேங்க் அமைத்து குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்திட மதிப்பீட்டு செலவினம் ரூ.2,00,000/– ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
**அனுமதி அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.117**

24. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.28 கிழக்கு தேர் வீதி (ராஜன் நகர்) பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு தண்ணீர் வசதியின்றி சிரமப்படுவதால் அப்பகுதியில் புதிதாக ஆழ்துளை கிணறு அமைத்து சிறுமின்விசை பம்ப் பொருத்தி குழாய் நீட்டிப்பு செய்தும், மற்றும் தெற்கு தேர்வீதியில் உள்ள பழுதடைந்த நிலையில் உள்ள SIntex தொட்டியை அகற்றிவிட்டு புதிய Sintex தொட்டி மாற்றி அமைக்கவும் மதிப்பீட்டு செலவினம் ரூ.2,70,000/– ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
**அனுமதி அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.118**

25. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.30 பஜனை கோவில் வீதி 2 –வது தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைத்து சிறுமின்விசை பம்ப் அமைத்து பஜனை கோவில் தெரு 3– வது வீதி மற்றும் வேதமுத்து வீதிக்கு குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்து தர மதிப்பீட்டு தொகை ரூ.2,50,000/– ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
**அனுமதி அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.119**

26. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளிலும் 97 ஆழ்துளை கை பம்ப்கள் உள்ளது. மேற்படி ஆழ்துளை கிணறு கைபம்ப் களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்து இயக்கிவிட நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தால் பொதுமக்கள் கோடையில் தண்ணீர் இன்றி சிரமப்படாமல் இருப்பதற்கு தனியார் சேவையினை பயன்படுத்தி பழுதுநீக்கம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இப்பணிகளுக்கு 2022–23 ஆம் ஆண்டிற்கு பராமரிப்பு பணிக்கான மதிப்பீட்டு தொகை ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்

**அனுமதி அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.120**

27. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.2 ஜெயராம் எக்ஸ்டன்சன் பகுதியில் உள்ள ஆழ்துளை கைபம்ப் –ஐ அகற்றிவிட்டு சிறுமின்விசை பம்ப் – ஆக மாற்றம் செய்து SIntex தொட்டி அமைத்து குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்து தரவும், காளியண்ணன் எக்ஸ்டன்சன் பகுதியில் உள்ள சிறுமின்விசை பம்ப்–லிருந்து வடக்கு நோக்கி குழாய் நீட்டிப்பு செய்யவும், வார்டு எண்.6 இல் தாசப்பன் வீதி I .II. III மற்றும் ராமர் எக்ஸ்டன்சன் – 1 பகுதியில் குழாய் நீட்டிப்பு செய்து தரவும் மதிப்பீட்டு தொகை ரூ.2,00,000/– ஆகும்.மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம்

**அனுமதி அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.121**

28. இந்நகராட்சியில் கீழ்கண்டுள்ள விவரப்படியான பணிகளை செய்வதற்கு 18.05.2022 தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை ரூ.** | **ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் பெயர் விபரம்** | **கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம்** |
|---|---|---|---|---|
| 1. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட திறந்த வெளியில் மலம் கழித்தலற்ற நகராட்சி (ODF+) சான்று பெற்றிட கழிப்பிடங்கள் புதுப்பிக்கும் (Re Certification ) பணி | 2,25,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு . |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.49 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 2. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.15.கபிலர் வீதியில் கீரிப்பள்ள ஓடையில் கைப்பிடி சுவர் அமைக்கும் பணி | 70,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.20 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.24 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 3. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி குடிநீர் விநியோகத்தில் உள்ள குடிநீர் உந்து குழாய்கள் மற்றும் | 9,90,000 | **M/s. சரவணன் & கோ 118 A ஆலந்தூர் ,கவுந்தப்பாடி** | 0.15 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | குடிநீர் விநியோக குழாய்களில் ஏற்படும் வெடிப்புகள் ,கசிவுகள் 2022-2023 அம் ஆண்டுக்கு பழுதுகள் பராமரிப்பு பணி செய்தல் | | T.சுகுமார்<br>1 ஆலந்தூர் , கவுந்தப்பாடி | 1.89 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 4 | கோபிசெட்டிபாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் – மின் மோட்டார்கள் பழுது நீக்கம் செய்தல் மற்றும் ஆண்டு பராமரிப்பு பணி செய்தல் | 9,00,000 | **M/s.ஹைட்ரோ மெக் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் கவுந்தப்பாடி** | 0.61 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு . |
| | | | M/s.குமரன் இன்ஜினியரிங் ஆப்பக்கூடல் , பவானி | 1.06 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 5. | கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குள் வார்டு எண்.26 சிவசண்முகம் வீதியில் உள்ள பெண்கள் கழிப்பிடத்திற்கு ஆழ்துளை கிணற்றில் புதிதாக நீர் மூழ்கி மின் மோட்டார் பொருத்தி மீட்டர் ரூம் அமைத்தல் | 1,10,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.19 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு . |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.64 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |
| 6. | கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான நாய்க்கன் காடு நகராட்சி நடுநிலைப்பள்ளியில் புதிய Sintex தொட்டி அமைத்தல் , மொடச்சூர் ஆரம்ப பள்ளியில் புதிய மின் மோட்டார் பொருத்துதல் மற்றும் கரட்டூர் உரக்கிடங்கு MCC யில் சர்வீஸ் ஒயர் மாற்றியது மற்றும் SDN காலனி ஆழ்குழாய் கிணற்றில் இருந்து பொது கழிப்பிடத்திற்கு குழாய் இணைப்பு வழங்குதல் | 1,00,000 | **M/s.சஞ்சய் எலக்ட்ரிக்கல்ஸ் ஒப்பந்ததாரர்** | 0.24 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு. |
| | | | M/s. எக்ஸ் புளோசிவ் எண்டர்பிரைசஸ் ஒப்பந்ததாரர் | 1.36 சதவீதம் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**(ந.க.எண்.367/2022/இ1)**

**அலுவலகக்குறிப்பு :-**

**அ)** 1. மேற்படி பணிகளில் வ.எண்.1–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. **சஞ்சய் எலக்ட்ரிகல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்

2 வ.எண்.2–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. **சஞ்சய் எலக்ட்ரிகல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்

3 வ.எண்.3–க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s. **சரவணன் & கோ** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்

4 வ.எண்.4க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் M/s.**ஹைட்ரோ மெக் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்

5 வ.எண்.5க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் அளித்துள்ள M/s.**சஞ்சய் எலக்ட்ரிகல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்

6 வ.எண்.6க்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் M/s. **சஞ்சய் எலக்ட்ரிகல்ஸ்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்

**அலுவலக குறிப்பு அ) 1,2,3,4,5 மற்றும் 6 அங்கீகரிக்கப்பட்டது மன்றத்தீர்மான எண்.122**

29. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கட்பட்ட வார்டு எண்.17 பஜனை கோவில் விதி 1 மற்றும் 2 ஆகிய பகுதிகளில் குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்யப்பட வேண்டியுள்ளது. இதற்கு மதிப்பீட்டு செலவினம் ரூ.0.50 இலட்சம் ஆகும். மேற்படி பணினை மேற்கொள்ளவும் . செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .
**அனுமதி அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.123**

30. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.29 இல் அண்ணா நகர் , முத்து நகர் , மாரியம்மன் கோவில் வீதி மற்றும் பழனியப்பன் வீதி ஆகிய பகுதிகளில் சிறுமின்விசை பம்ப் குழாய் நீட்டிப்பு செய்யப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணினை மேற்கெள்வதற்கு மதிப்பீட்டு செலவினம் ரூ.1.00 இலட்சம் ஆகும் . மேற்படி பணினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .
**அனுமதி அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.124**

31. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண் 7 கருமாயா வீதியில் மழைநீர் வடிகால் அமைக்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி பணிக்கு மதிப்பீட்டு செலவினம் ரூ.2.50 இலட்சம் ஆகும் .மேற்படி பணியினை மேற்கொள்ளவும் , செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .
**அனுமதி அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.125**

32. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22 ஏரி மாரியம்மன் கோவில் அருகில் உள்ள ஆழ்துளை கிணற்று Air Compressor மோட்டாரை அடிக்கடி பழுதடைந்து தண்ணீர் விநியோகம் பாதிக்கப்படுவதால் நீர் மூழ்கி மோட்டராக மாற்றியமைத்து ஜின்னிங் பேக்டரி வீதியில் மின் மோட்டார் அறை அமைக்கப்பட வேண்யுள்ளது.

மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு மதிப்பீட்டு செலவினம் ரூ.2.00 இலட்சம் ஆகும் மேற்படி பணினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .
**அனுமதி அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.126**

33. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8 இல் மங்கம்மா வீதியில் சிறுபாலம் அமைக்கப்பட வேண்டியுள்ளது. இதற்கு மதிப்பீட்டு செலவினம் ரூ.2.50 இலட்சம் ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும் , செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .
**அனுமதி அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.127**

34. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.27 இல் உள்ள வேங்கம்மையார் பள்ளி அருகில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து உள்ளது. இதனால் பொது மக்களுக்கு போக்குவரத்திற்கு

சிரமம் ஏற்படுகிறது. அதனால் மேற்படி பழுதடைந்த சிறுபாலத்தினை அகற்றிவிட்டு புதிதாக சிறுபாலம் அமைக்க மதிப்பீட்டு செலவினம் ரூ.1.50 இலட்சம் ஆகும். மேற்படி பணினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் ,

**அனுமதி அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.128**

35. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24 இல் அன்பு நகர் பகுதியில் உள்ள சிறுபாலம் பழுதான நிலையில் உள்ளது. இதனால் பொது மக்கள் போக்கவரத்திற்கு சிரமமாக உள்ளது. எனவே மேற்படி பழுதான சிறுபாலத்தினை அகற்றிவிட்டு புதிதாக சிறுபால அமைத்திட மதிப்பீட்டு செலவினம் ரூ,2.00 இலட்சம் ஆகும் .மேற்படி பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .

**அனுமதி அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.129**

36. கோபிசெட்டிபாளையம் நகராட்சி வார்டு எண்.23 இல் உள்ள சிறுமின்விசை பம்ப் லிருந்து கீழ்கண்டுள்ள பகுதிகளுக்கு குழாய் நீட்டிப்பு செய்து தண்ணீர் வசதி செய்யப்பட வேண்டியுள்ளது.

1. சாமிநாதபுரம் .
2. வள்ளி தியேட்டர் ரோடு , மற்றும்
3. ஸ்லேட்டர் ஹைவுஸ் வீதி

மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீட்டு செலவினம் ரூ.1.50 இலட்சம் ஆகும் ,இப்பணினை செய்திடவும் செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .

**அனுமதி அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.130**

37. கோபிசெட்டிபாளையம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021–2022 ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சிக்கு பணிகள் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தினசரி பத்திரிக்கையில் விளம்பரம் செய்து கொடுத்தமைக்கான விளம்பரக்கட்டணம் ரூ.7711/– (ரூபாய் ஏழாயிரத்து எழுநூற்று பதினொன்று மட்டும்) தினகரன் நாளிதழிற்கு KAL PUBLICATIONS (P) LTD என்ற பெயரில் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. (ந.க.எண்.711/2022/இ1)

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதி வழங்கலாம் .
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**அலுவலக குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.131**

38. இந்நகராட்சியில் பணிபுரிந்து ஓய்வு பெற்ற, காலஞ்சென்ற மற்றும் தற்பொழுது பணியாற்றி வரும் அலுவலர்கள், பணியாளர்களின் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சேம நல நிதி தொகை கணக்கிடப்படாமல் உள்ளதை உள்ளாட்சி நிதித்தணிக்கை பத்திகளில் தொடர்ந்து தணிக்கைத்தடை எழுப்பப்பட்டு வருகிறது.

மேற்படி வட்டித்தொகை பெற சம்மந்தப்பட்ட அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு திரும்ப வரப்பெற்ற பிரேரணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளை களைந்து கீழ்கண்டுள்ள விபரப்படி மேற்படி சேம நல நிதி சந்தா தொகைக்கான வட்டித்தொகை கணக்கிட்டு பயனாளிகளுக்கான உரிய தொகை பகிர்ந்தளிக்கப்படும் பணிகளுக்கான பிரேரணைகள் தனியார் மூலம் செய்து முடிக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2442/2017/அ4)

1. பங்குத்தொகை (Subscription) 2002–2003 ஆம் ஆண்டு முதல் 2020–2021 வரையிலான 20 ஆண்டுகளுக்கான வட்டித்தொகை கணக்கீடு.
2. 1989 – 1990 ஆம் ஆண்டு முதல் 2020–2021 வரையிலான ஐந்தாவது ஊதியக்குழு நிலுவைத்தொகைக்கான வட்டி 33 ஆண்டுகளுக்கான கணக்கீடு
3. 1998– 1999 ஆம் ஆண்டு முதல் 2002–2003 வரையிலான ஆறாவது ஊதியக்குழு நிலுவைத்தொகைக்கான வட்டி 5 ஆண்டுகளுக்கான கணக்கீடு

**அலுவலக குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.
**அனுமதிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.132**

39. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண்.7 இல் அமைந்துள்ள ' நகராட்சி பொறியாளர் குடியிருப்பில் மராமத்துபணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இதற்கு மதிப்பீட்டு செலவினம் ரூ.70,000/– ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும் செலவினத்தை நகராட்சி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .
**அனுமதி அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.133**

40. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 116 தெருக்களில் 900 எண்கள் வான்வழி கம்பங்கள் 24.361 கிலோ மீட்டர் (Aerial Poles) Telegraphic உள்கட்டமைப்பு நிறுவ ஜியோ டிஜிட்டல் பைபர் (Private) Ltd நிறுவனம் அனுமதி கோரியுள்ளதாகவும் தகவல் தொழில் நுட்ப துறை அரசாணை G.O.(Ms) No. 4 information Technology (E1) துறை நாள். 25.01.2022 இல் தெரிவித்துள்ளவாறு வழிமுறைகளை பின்பற்றி வான்வழி கம்பங்கள் நிறுவுவது தொடர்பான விரிவான முன் மொழிவினை 15 தினங்களுக்குள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறும் ஏனெனில் மனுதாரருக்கு 60 நாட்களுக்குள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உத்தரவு பிறப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே உரிய முன்மொழிவுகளை உடன் அனுப்பி வைக்குமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.11721/2022/கே3 நாள்.07.05.2022 இல் கோரப்பட்டுள்ளது.

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 116 தெருக்களில் 900 எண்கள் (Aerial Poles) வான்வழி கம்பங்கள் அமைக்க அரசாணை (MS) எண்.04 Information Technology (E1) துறை நாள்.25.01.2022 இல் கிலோ மீட்டர் ஒன்றுக்கு ரூபாய் 1000 வீதம் 25 கிலோ மீட்டருக்கு ரூபாய் 25000/– (ஒருமுறை மட்டும்) Axis Bank DD No.284.184 நாள்.16.03.2022 இல் இந்நகராட்சிக்கு மேற்படி நிறுவனத்தாரால் செலுத்தப்பட்டுள்ளது. (Aerial Poles) வான்வழி கம்பங்கள் பராமரிப்புக்காக கம்பம் ஒன்றுக்கு ரூபாய்.500/– வீதம் 900 கம்பங்களுக்கு ரூபாய்.4,50,000/– (ஒருமுறை மட்டும்) இந்நகராட்சிக்கு மேற்படி நிறுவனத்தாரால் செலுத்தப்பட வேண்டும்.

மேற்படி மனு குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கடிதத்தில் 60 நாட்களுக்குள் அனுமதி வழங்குவது அரசாணை (MS) எண்.04 Information Technology (E1) துறை நாள்.25.01.2022 இல் தெரிவிக்கப்பட்டுள்ளதாலும் விரைவில் இது குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளதாலும் இதற்கு அனுமதி வழங்குவது தொடர்பாக கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு முன்மொழிவினை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. Aerial Pole ஒன்றுக்கு ரூ.500/– வீதம் 900 எண்கள் ரூ.4,50,000/– மேற்படி நிறுவனத்தாரால் செலுத்திய பின்னர் முன்மொழிவுகள் அனுப்பலாம்.
2. மேற்படி பணிகள் மேற்கொள்ளப்படும்போது பொதுமக்களுக்கும் போக்குவரத்துக்கும் எவ்வித இடையூறுமின்றி பணிகள் மேற்கொள்ளபட வேண்டும்.
3. 116, தெருக்களிலும், 25 கி.மீ தூரத்திற்கு 900 எண்ணிக்கையில் அமைக்க இருக்கும் வான்வழி கம்பங்கள் (AERIAL POLES) வாயிலாக Optical பைப்பர் (Fiber) கேபிள் (Cable) தடம் மட்டுமே அமைக்க வேண்டும்.
4. மேற்குறித்த நிபந்தனைகளுக்கு மாறாகவோ, பொது மக்களுக்கும், போக்குவரத்துக்கும் பணிகள் செய்யும் போது எவ்வித இடையூறும் இன்றி பணிகள் மேற்கொள்ளவில்லை என்றாலும்,ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு இந்நகராட்சியிலிருந்து புகார்

அனுப்ப நேரிடும். மேலும், சட்ட சிக்கல் மற்றும் இதில் ஏதேனும் இழப்பீடுகள் மற்றும் ஏதாவது பிரச்சனைகள் ஏற்படின் இந்நகராட்சி எவ்விதத்திலும் பொறுப்பேற்காது. (ந.க.எண்.1066/2022/எப்1)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்
**அனுமதி அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.134**

41. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வீரபாண்டி கிராமம் வார்டு D பிளாக் 20, நகரளவை எண்.32, சர்வே எண்.248/Bpt, 249/Apt இல் உள்ள 10,000 ச.மீ (2.475 ஏக்கர்) காலியிடத்தினை முழுமைத்திட்டத்தில் விவசாய பகுதியாக உள்ளதை குடியிருப்பு பகுதியாக மாற்றம் செய்து தருமாறு 20.04.2022 ஆம் நாளிட்ட திரு.K.பொன்னுசாமி மற்றும் திருமதி.ராஜம்மாள் ஆகியோரால் கோரப்பட்டுள்ளது.

இந்நகராட்சியில் 24.11.1982 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட மாற்றம் செய்யும் பொருட்டு அரசு ஆணை எண்.485 நாள்.04.06.1990 இல் வீட்டுவசதி வாரிய துறையால் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 32(3) (15) மற்றும் பிரிவுகள் 32 (2c) இன் படி திருத்திய முழுமைத் திட்டம் 2011 (Modified Master Plan Land Use 2011) 1992, ஆம் ஆண்டு இறுதி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மேற்காணும் பகுதியில் உள்ள வார்டு D பிளாக் 20 நகரளவை எண்.32 நகராட்சி வார்டு எண். 18 கரட்டூர் பாரதிவித்யாலயா பள்ளி அருகில் 10,000 ச.மீ (2.475 ஏக்கர்) இடமானது அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தி திட்டம் எண்.7 இன் படியும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின் படியும் விவசாய பகுதி (Agriculture) வகைப்படுத்தப்பட்டுள்ளது. மனையிடத்திற்கு அனுகுபாதை 15.20 மீ அகலமுள்ள சாலை உள்ளது மனையிடத்தின் வடபுறம் சாலையும், தென்புறத்தில் பச்சைமலை சேரன் நகர் எனும் பெயரில் குடியிருப்பு பகுதியும் கிழபுறம் மானாவாரி நிலங்களும் மேற்குபுறத்தில் விவசாயம் அல்லாத பூமியாகவும் அமைந்துள்ளது.

மனையிடத்தினை சுற்றியும் வரையறுக்கப்படட தூரத்திற்குள், ஆறு, ஏரி, குளம் மற்றும் குட்டை போன்ற நீர்நிலைகள் ஏதும் அமையவில்லை மேலும் சுடுகாடு, இடுகாடு ஆகியவைகள் அமையப்பெறவில்லை எனவே மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் மனுதாரருக்கு சொந்தமான 10.000 ச.மீ (2.475 ஏக்கர்) நிலத்தினை விவசாய உபயோகத்திலிருந்து குடியிருப்பு உபயோகப்பகுதியாக நில உபயோக மாற்றம் செய்து தர மாவட்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் ஈரோடு, மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை வழியாக தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை அரசுச் செயலர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்காக வைக்கப்படுகிறது. (ந.க.எண்.847/2022/எப்1)

**அலுவலகக்குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்
**ஒத்திவைக்கப்பட்டது. மன்றத்தீர்மான எண்.135**

42. கோபிசெட்டிபாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10 – இல் மின் நகர் மற்றும் ஆஞ்சநேயா நகர் பகுதிகளில் சிறு பாலங்கள் மற்றும் மழைநீர் வடிகால் (விநாயகர் கோவிலில் இருந்து) கட்டுவதற்கு மதிப்பீட்டு செலவினம் ரூ.6.00 இலட்சம் ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதி வழங்கலாம் .
**அனுமதி அளிக்கப்பட்டது, மன்றத்தீர்மான எண்.136**

43. கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.17 கமலா ரைஸ் மில் சந்தில் உள்ள ஓடையில் புற்கள் மற்றும் குப்பைகள் பொதுமக்களால் கொட்டப்பட்டதால் நீர் வரத்து தடைபட்டுள்ளது. இதனால் மழை காலங்களில் அடைப்பு காரணமாக குடியிருப்புகளின் உள்ளே கழிவு நீர் சென்றுவிடும் அபாயம் உள்ளது. எனவே, மேற்படி ஓடையில் உள்ள தடைகளை Mini Hitachi அல்லது Bobcart கொண்டு சுத்தம் செய்யவும் வேண்டியுள்ளது. இப்பணிக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.30,000/– ஆகும். மேற்படி பணியினை மேற்கொள்ளவும்,

செலவினத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1. மன்றம் அனுமதி அளிக்கலாம் .

2. பணியின் அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி வேலை உத்திரவு வழங்கப்பட்டு பணியினை மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**அலுவலக குறிப்பு 1. அனுமதி அளிக்கப்பட்டது 2. அங்கீகரிக்கப்பட்டது**
**மன்றத்தீர்மான எண்.137**

(ஒப்பம்) – என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

// உண்மை நகல் உத்திரவு படி//

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி